https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# திருக்குறளில் அறிவியல் பார்வை

**முனைவர் ம. பாபு**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பி.எஸ்.ஜி. கலை & அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்

***Abstract***

Today's world is powered by admirable scientific power It is true that there is. But this is twenty one Century, i.e. the year two thousand and six. Tiruvalluvar's time, All this is pre-dated. At that time, there was an underground lamp Only the time when the light shined. As it is nowadays, letters, Pens as print marks and pen as pen Period used. This sub was created in ancient times In the book, scientific ideas that are still relevant today Who shouts the slogan "Can you say, if you can?" The only book is the Thirukkural called 'Muppal'.

ஆய்வுச் சுருக்கம்

இன்றைய உலகம் போற்றுதற்குரிய அறிவியல் ஆற்றலால் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பது உண்மை. ஆனால் இஃது இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டு, அதாவது இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டு. திருவள்ளுவரின் காலம், இவற்றிற்கெல்லாம் முற்பட்டகாலம். அக்காலத்தில் அகங்களில் அகல்விளக்கு மட்டுமே ஒளி வீசிய காலம். இக்காலத்திலிருப்பது போல், கடிதங்களோ, எழுதுகோல்களோ, அச்சுக் சுவடிகளாகவும், எழுத்தாணியே எழுதுகோலாகவும் பயன்படுத்தப்பட்ட காலம். இத்துணை தொன்மை வாய்ந்த காலத்தில் படைக்கப்பட்ட நூலில், இன்றளவிலும் பொருத்தமுடைய அறிவியல் சிந்தனைகளைச் சொல்லமுடியுமா, என்றால் முடியும் என்ற முழக்கத்தை ஓங்கி ஒலிக்கச் செய்கின்ற, ஒரே நூல் 'முப்பால்' என்னும் திருக்குறளாகும்.

***Keywords*** **:** வினைப்பயன், அறிவு, இலக்கணம், மேலாண்மைத் துறை, வீடுபேறு, திருக்குறள், அறிவியல். Verbs, Knowledge, Grammar, Management, Housekeeping, Thirukkural, Science.

முன்னுரை

மனித முயற்சியின் நோக்கம் எடுத்துக் கொண்ட செயலில் அதில் உள்ள உண்மையைக் காணும் பணியாகும். அத்தகைய பணியைத் தலைமுறை தலைமுறையாக மனித சமுதாயம் ஈடுபட்டு வந்திருக்கிறது. அறிவியல், தத்துவம், சமயம் இவற்றின் அடிப்படை

இலக்கு உண்மை என்னும் இடமாகும். இவற்றில் உள்ள உண்மையைக் காண்பதற்கு தடைகளாக இருப்பவை விருப்பு, வெறுப்பு, பற்று, நம்பிக்கை போன்றவை ஆகும். அதே போல் தேசப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று, சமயப்பற்று இவை அனைத்தும் உயர்ந்த பண்புகள் ஆகும். ஆனாலும் தனது மொழி, தனது தேசம், தனது இனம் என்று உண்மை காண்பதற்கு, அவற்றின் மீது இருக்கும் பற்றுகள் ஒரு திரை போல நின்று பார்வையை மறைக்கலாம் அல்லது மங்கச் செய்யலாம். உண்மையைக் காணும் ஒளி பெற்றவர் தான் அறிஞர், ஆய்வாளர் என்ற தலைப்புக்குத் தகுதி பெற்றவர். இயற்கையின் நிகழ்வுகளில் வாழ்வியலில் உண்மையைக் காண்பதற்காக இன்றைய ஆய்வுலகம் பயன்படுத்து நெறிமுறையை அறிவியல் அணுகுமுறை என்று கூறலாம். உண்மையை காண்பதில் ஒரு மனிதன் சிந்தனை, அறிவு முழு உரிமையும் கொடுத்து அதன் அடிப்படை யில் அமைந்த முடிவுகள் அனைத்தும் விருப்பு, வெறுப்பு இன்றி, ஏற்கும் மனநிலை அறிவியல் பார்வை என்கிறோம். அதன் வழி அமைந்த செய்முறை அறிவியல் அணுகுமுறை ஆகும். ‘அறிவியல் முறை’ அல்லது ‘அறிவியல் ஆய்வு முறை’ வரையறுக்கப்பட்டு இடம்பெற்றது 17ஆம் நூற்றாண்டில் உண்மை காண்பதற்கு அறிவியல் ஆய்வுமுறை பயன்படுத்தப் பட்டது அதற்கு கிட்டத்தட்ட இலக்கணமும் வகுக்கப்பட்டது. இது ஓர் ஆய்வுக் கருவியாகும். பழைய காலத்தில் இருந்த மேதைகள் அவர்கள் இயற்கையி லேயே அறிவியல் அணுகுமுறையைப் பயன்படுத்தும் சிந்தனை வளமும், தெளிவும் பெற்றிருந்தார்கள். அவர் கள் வாழ்ந்த கால எல்லையைத் தாண்டி அவர்களுடைய மரபுகளை மீறி எதிர்காலத் திற்குள் ஊடுருவும் திறன், இந்த கூறுபாடு வள்ளுவர் குறளில் பரவி இருப்பதைக் காணலாம். அவற்றை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### வினைப்பயன்

**அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும்
செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்** *(குறள் - 169)*

சில சமயங்களில் நல்லவர்கள் நலிகிறார்கள், அல்லவர் பலர் இன்பத்தோடு ஆடம்பர வாழ்வு வாழ்கிறார்கள். இன்றும் அதைப் பார்க்கிறோம், கடந்தகாலத்திலும் பார்த் தோம், நாளையும் இது இருக்கும். பொது வாக என்ன நடக்க வேண்டும் நல்லவர்கள் இன்புற வேண்டும், அல்லவர்கள் தண்டனை அனுபவிக்க வேண்டும். நடைமுறைக்காட்சி மாறாக இருக்கிறது ஏன்? என்ற கேள்வியை வள்ளுவர் எழுப்புகிறார்.

வள்ளுவர் முன்பிறவி, இப்பிறவி என்று இங்கு வாழும் உயிர் பல பிறவிகள் எடுக்குந் தன்மை உடையது. அதே போல் சொர்க்கம், நரகங்கள் பற்றி பேசுகிறார். நல்லவன் ஒருவன் நலிவான் என்றால் சென்ற பிறவியில் தீவினை செய்துள்ளான். அதன் பொருட்டு இப்பிறவியில் இன்னல் படுகிறான். தீயவன் நல்லது செய்துள்ளான் இதன் காரணமான இன்பமாக இருக்கிறான் என்று ‘நினைக்கப்படும்’ என்றும் அதனை ‘ஆராயப்படவேண்டியது’ என்கிறார். கடவுள், விதி, பலபிறவிகள், முன் பிறவியில் செய்த விளைவின் பயன்கள். சொர்க்கம், நரகம் அனைத்தும் விளக்க முடியாத கேள்விகள் பல சிக்கல்கள் இருக்கின்றன. இன்றைய கல்வியறிவு மெய்யறிவு போதாது. இன்னும் அதனைக் கொண்டு ஆய வேண்டும் என்கிறார்.

### அறிவு

**அறிவுடையார் எல்லாம் உடையார்
அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்** *(குறள்-430)*

என்று கூறவந்த வள்ளுவர். ‘அறிவுடையார் எல்லாம் உடையார்’ என்று அறுதியிட்டுக் கூறுகிறார். பரிமேலழகர் உரை ”செல்வங் கள் எல்லாம் அறிவால் படைக்கவும் காக்கவும் படுதலின் அஃது உடையாரை ‘எல்லாம் உடையார்’ என்றும், அவையெல் லாம் முன்னேயமைந்து கிடப்பினும் அழியாமற் காத்தற்கும், தெய்வத்தான் அழிந்துழிப் படைத்தற்கும் கருவியுடையரன் மையின் அஃதில்லாரை என்னுடையரேனும் இலர் என்றும் கூறுகிறார்” என விளக்குகி றார். (அறிவியல் பார்வை ப.69)

ஒரு மனிதனிடம் இயற்கை செல்வம் இல்லாத காலத்தும் நம்மிடையே கல்வியறிவு என்ற செல்வம் இருக்கும் போது நமக்கு வேண்டிய செல்வத்தை படைக்கும் திறன் உருவாக்கலாம். இந்த கருத்தின் ஆழம் என்பது பொதுவாக நமக்கு எந்த விதமான பொருள் தேவைப்பட்டாலும், அதற்கு ஏற்ற இயற்கைத் தாதுப் பொருள் ஒன்றைத் தேடுகிறோம். இரும்பு வேண்டுமானால் மர்க்னடைட் என்ற தாதுப்பொருள் தேவைப்படுகிறது. அதேபோன்று அலுமினியம் வேண்டுமானால் பாக்சைட் தாதுப் பொருள் தேவைப்படுகிறது. விண்கலன்கள் வானவெளியில் செலுத்தப்படுகின்றன, ஆனால் அவை உறுதியாகவும், எடை குறைந்தாகவும் அதிக வெப்பத்தைத் தாங்கும் ஆற்றல் கொண்டதாகவும் இருக்க வேண்டும். இவை அனைத்தும் ஒருங்கே இணைந்த செய்பொருள் இயற்கை யில் கிடைக்காது அப்படிப்பட்ட செய் பொருள், சோதனைச்சாலையில் உருவாக்கப்படுகிறது. அறிவின் வளர்ச்சி என்பது கல்வியறிவை கருவியாகக் கொண்டு இல்லாத ஒரு செல்வத்தை மனிதன் படைக்கிறான். இது 20ஆம் நூற்றாண்டின் சாதனை ஆகும். ஆனால் 2000 ஆண்டுகட்கு முன்பு அறிவின் ஆற்றல் இந்த நிலையை எட்டவில்லை. ‘அறிவுடையார் எல்லாம் உடையார்’ என்று வள்ளுவர் கூறியிருப்பதும், ‘செல்வம் அழிந்தபோது படைக்கும் கருவியுடையார் அறிவுடையார்’ என்று பரிமேலழகர் விளக்கம் கூறுகிறார் என்பது எண்ணி , எண்ணி வியக்கத்தக்க ஒன்றாகும்.

ஜப்பான் நாட்டில் இன்றைய பொருளாதாரம் வளம் என்பது இயற்கை வளமோ, நிலப்பரப்பை பொறுத்தோ, மக்கள் தொகையைப் பொறுத்தோ அமைந்ததாக கூறுவதற்கில்லை. ஜப்பானை விட பன்மடங்கு வசதி படைத்த நாடுகள், வறுமையில் வாடுகின்றன. ஆனால் ஜப்பான் முன்னேற்றம் என்பது மக்கள் தரம் முக்கியமானதாகும். அத்தரத்தின், தகுதியின் தலையான் கூறுபாடு அவர்கள் கல்வியும் அறிவியல் தொழில்நுட்பத்துறை மற்றும் அறிவுத்துறைகளில் அமைந்துள்ள வளர்ச்சியாகும்.

17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பேகன் என்பவர் உயர்ந்த சிந்தனையாளர் ‘அறிவே ஆற்றல்’ என்றார். ஏறத்தாழ 16 ஆம் நூற்றாண்டிற்கு முன்பே வள்ளுவர் ‘அறிவே அனைத்தும்’ என்றார்.

**இலக்கணம்**

அறிவியல் அணுகுமுறைக்கு அன்றைய காலத்திலே வள்ளுவர் இலக்கணம் வகுத்து தம் குறளில் குறிப்பிட்டுள்ளார்.

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**

**மெய்ப்பொருள் காண்ப தறிவு** (குறள்-423)

**எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**

**மெய்ப்பொருள் காண்பது அறிவு** (குறள்-355)

‘மெய்யுணர்தல்’ பகுதியில் இக்குறள் கூறப்பட்டாலும் அறிவியல் ஆய்வு முறைக்கு வகுத்த இலக்கணம் ஆகும்.

**மேலாண்மைத் துறை**

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**

**அதனை அவன்கண் விடல்** (குறள்-517)

வள்ளுவர் ஒவ்வொரு துறையிலும் தலை சிறந்த அறிவியல் பார்வையோடு ஒவ்வொருப் பிரச்சனைகளையும் அணுகியிருக்கிறார். வினைசெய்வதற்குப் பொருத்தமான ஒருவரைத் தேர்ந்தெடுப்பது, அப்படித் தேர்ந்தெடுத்தபின் அவரது பொறுப்பை வரையறுப்பது அன்றும் சரி, இன்றும் சரி கடினமான பணியாகும். பொறுப்பில் உள்ள ஒருவர் கட்டாயம் செய்ய வேண்டிய பணியாகும். Management துறை நிபுணர்கள் கூட எண்ணி வியக்கத்தகுந்த இயல்பு உடையன.

**அறந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்**

**சிறந்தானென்று ஏவற்பாற் றன்று** (குறள்-515)

என்கிறார். ஒரு பணியைச் செய்யத் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவனுக்கு முதல் அதை செய்வதற்குத் தேவையான வழிவகைகளைக் காணும் அறிவு இருக்க வேண்டும். அறிவு மட்டுமே போதுமானதன்று. செயற்படுங்கால் ஏற்படும் துன்பங்கள் பொறுக்கும் ஆற்றலும் தேவை.

ஒரு பொருப்பை யாரிடம் கொடுக்கக் கூடாது என்று எச்சரிக்கிறார். கொடுக்கக் கூடாதவர்கள் 'சிறந்தானென்று ஏவற்பாற்ற ன்று' பரிமேலழகர் உரையில் 'நம் மாட்டு அன்பு உடையனென்று, பிறனொருவனை ஏவும் இயல்புடைத்தன்று' என்கிறார். அதாவது நமக்கு வேண்டியவர் என்பதற்காக ஒரு பணியைக் கொடுக்கக் கூடாது.

**எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்**

**வேறாகும் மாந்தர் பலர்** *(குறள்-514)*

எவ்வளவு கவனமாக ஆராய்ந்தும், எவ்வளவு விளிப்புடன் அளவிட்டுத் தெளிந்தும், தேர்ந்தும் கொடுத்த வினையைச் செய்யும் நிலையில் மாறுபடும் மன நிலையில் உள்ளவர்களும் இருக்கிறார்கள். அப்படியிருக் கையில் தேர்ந்த பின்னும் அவர்கள் ஆரம்ப காலத்தில் கவனிக்கப்பட வேண்டியவர்கள். மேலும் தெளிந்த பின்னர்தான், அவர்கள் பால் பொறுப்புகள் ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு முறையாக ஆய்ந்து பின் தெளிந்து பின் ஒருவருக்குப் பொறுப்பைக் கொடுத்த பின்னர் அவர் பணியில் தலையிடக் கூடாது. அவருக்கு அவ்வப்போது முடிவு எடுக்கும் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று நிர்வாக இயல் வளர்ச்சி உடைய இன்றைய தத்துவம் ஆகும்.

வள்ளுவர் ஒருபடி மேலாகச் சென்று அந்தப் பணிக்கு அவரையே உரிமையுடை யவராக செய்யவேண்டும்.

**வினைக்குரிமை நாடிய பின்றை அவனை**

**அதற்குரிய னாகச் செயல்** *(குறள்-518)*

'தெரிந்து வினையாடல்' அதிகாரத்தில் குறிப்பிடுகிறார். ஒரு வினைக்கு ஏற்றவரைத் தேர்ந்தெடுப்பதிலிருந்து அவரது பொறுப்பை நிர்ணயிப்பது வரை அடிப்படைக் கூறுபாடு கள் சில குறள்களில் தெளிவாக கூறுகிறார்.

**வீடுபேறு**

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருட்கள் கூறப்படுகின்றன. அதில் அறம், பொருள், இன்பம் என்பவை இவ்வுலம் சார்ந்தவை ஆகும். ஆய்வுக்கும் விவாதத்திற்கும் விருப்பு, வெறுப்பு இன்றி உண்மை காண்பதற்கு பெரிய தடை ஏதம் இல்லை. வீடு மட்டும் நாம் வாழும் உலகிற்கு அப்பாற்ப்பட்டது. வீடுபேறு என்று வரும் போது சமயம் வந்துவிடுகிறது. சமயம் என்று வரும் போது நம்பிக்கையும் அதனுடன் கூடவே தொடர்கிறது. அப்போது அங்கே ஆய்வுக்கு வழி இல்லை, அறிவியல் பார்வைக்கும் வழி இல்லை.

தமிழ்ப் பண்பாடு அகம், புறம் பற்றிப் பேசுகிறது. அறம், பொருள், இன்பம், வீடு இந்த நான்கு கூறுபாடுகள் இந்தியப் பண்பாட்டோடு இணைந்தவை. இந்த நான்கு பகுதிகள் வள்ளுவர் காலத்தில் தமிழகத்திற்கு அறிமுகமானவையே எனினும் வள்ளுவர், வீடு என்னும் பகுதியைப் பற்றி நேரடியாகப் பேசவில்லை. வீடுபேறு என்பதை அவர் நம்பிவில்லையா என்ற கேள்வி எழலாம. அறவழி நின்று வைய வாழ்வை முறையோடு நடத்துபவர்க்கு வீடு என ஒன்று இருந்தால் அதில் தானாக இடம் கிடைக்க வேண்டும். 'இம்மைச் செய்தது மறுமைக் காமெனும் அறவிலை வாணிகம்' தமிழ்ப் பண்பின் கூறுபாடன்று, 'வீடும் வேண்டா விறலிலை' என்று பலன் கருதாத வாழ்வினர் போற்றப்படுகின்றனர்.

எனவே வள்ளுவர்

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**

**தெய்வத்துள் வைக்கப் படும்** *(குறள்-50)*

என்று கூறி, இந்தப் பிரச்சனைக்கு முடிவு காண்கிறார்.

**முடிவுரை**

வள்ளுவர் வையத்தின் மீது கால்கைளை ஊன்றி நின்று வானைத் தொடுகிறார். அறிவுலவின் அடித்தளத்தின் மீது அமர்ந்து பார்க்கிறார். இருபதாம் நூற்றாண்டினர்க்கே இந்த அணுகுமுறை அண்மைக் காலங்களில் உருவானதாகத் தோன்றும் ஒன்று. இருபது நூற்றாண்டிற்கு முன்பு, முடிவு இல்லாத சில பிரச்சனைகட்கு வாதங்கட்கு இவ்வளவு நுண்ணிய முடிவு கண்டிருப்பது எண்ணும் தொறும் வியப்பளிக்கும் ஒன்றாகும்.